Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆண்டு ஆடி 15 ஆம் உ செவ்வாய்க்கிழமை (31 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 08 ஓசை 163

## மட்டக்களப்பில் கைதாகிய சிற்ப ஓவியர்கள் எங்கே?

(கொழும்பு)

சிறிலங்கா அரச படையினரால் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்டுக் காணாமல் போயுள்ள இந்திய சிற்ப ஓவியர்கள் பற்றிய விடயம் இந்திய தூதரகத்தினால் இலங்கை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது

மேற்படி நான்கு சிற்ப (4ஆம் பக்கம் பார்க்க)

## இந்த இளைஞரின் ஆராய்ச்சி ஆஸ்பத்திரியில் சேர்த்தது

(காரைநகர்)

காரைநகரில் கடற்படைக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட வெடிக்காத ஷெல் ஒன்றைக் கையில் எடுத்து அதனை ஆராய்ச்சி செய்ய முற்பட்ட ஒருவர் ஷெல் வெடித்து பலத்த காயத்திற்குள்ளானார்.

இராசேந்திரம் என்ற 20வயது இளைஞர் தமது வீட்டின் சுற்றாடலில் இருந்த ஒரு (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் முக்கிய அரச பதவிகளுக்கு சிங்களவரே !

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பொறுப்பான அரச பதவிகளுக்கு சிங்களவர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றார்கள்.

தற்பொழுது அங்கு நிகழும் இராணுவ நடவடிக்கைகளின் நிமித்தம் தமிழ் உத்தியோகத்தர்கள் இடம் பெயர்ந்துள்ளமையும்; வவுனியா மாவட்ட அரச அதிபராக இராணுவ இணைப் பதிகாரியாக கேர்ணல் (4ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டையில் ஹெலி இறங்கும் முயற்சி நேற்று முறியடிப்பு

## யாழ்நகர் மீது போர் விமானங்கள் அட்டகாசம்!

(யாழ்ப்பாணம்)

ஐந்து குண்டுவீச்சு விமானங்களும், அவ்ரோ விமானங்களும் நகரில் பல இடங்களிலும் நேற்றுக் காலைமுதல் குண்டுவீசித்தாக்கி அட்டகாசம் செய்து நகரைக் கலக்கியபின்னர் மாலையில் ஐந்து விமானங்கள் குண்டுவீச யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இறங்குவதற்கு ஹெலிக்கொப்டர் எடுத்த முயற்சியை விடுதலைப் புலிகள் எதிர்த்துத் தாக்கி முறியடித்ததுடன் ஹெலிக்கொப்டரும், விமானங்களும் கண்ட இடங்களிலும் குண்டுகளை வீசிவிட்டுத் திரும்பிச்சென்றன.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தையே அழித்து விடுவதுபோல நேற்றுக் காலையிலிருந்து மாலைவரை ஸ்ரீலங்கா விமானப்படைப் போர் விமானங்கள் யாழ். நகரில் பல இடங்களிலும் கண்மூடித்தனமாகச் சரமாரியாகக் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தின. அவ்ரோ விமானங்கள், குண்டு வீச்சில் புதியரக விமானங்கள், ஹெலிக்கொப்ரர்கள் என்று வானத்தில்அட்டகாசம் புரிந்த ஸ்ரீலங்கா விமானப் படையின் தாக்குதல் நடவடிக்கைகளைக் கண்டு மக்கள் பீதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ். கோட்டைப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சால் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த அகஸ்ரின் வீரமரணமடைந்தார். விடுதலைப் புலிகள் அவருக்கு தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சியில் வீதிகளிலும் வயல்களிலும் சடலங்கள்

(கிளிநொச்சி)

கடந்தவாரம் கிளிநொச்சியிலும், பரந்தனிலும் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட கடும் சண்டையில் இறந்தவர்களின் எண்ணிக்கை முன்னர் வெளிவந்ததை விட அதிகமானதாகும் என தற்பொழுது அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் சண்டையின்போது இறந்தவர்களின் உடல்கள் வீதிகளிலும், வயல்களிலும் இன்னும் அகற்றப்படாமல் இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு கிடப்பவற்றில் பெரும்பாலானவை இராணுவத்தினருடையதாகவும், சில பொதுமக்கள் உடையதாகவும் தெரியவருகின்றது.

அதேவேளை கிளிநொச்சியில் இருந்து பின்வாங்கி பரந் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கிணற்றினுள் அழுகிய நிலையில் ஆணின் சடலம்

(செட்டிக்குளம்)

செட்டிக்குளம் சிறிலங்கா இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள கிணறொன்றுக்குள் அழுகிய நிலையில் ஆணின் சடலமொன்று கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

கடந்த சில தினங்களுக்கு முன்பு தனது தோட்டத்தில் உள்ள முருங்கைக்காயைப் பிடுங்குவதற்காகச் சென்ற ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். இவ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு இராணுவம்மீது புலிகள் சினைப்பர் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிற்கு கடந்த 29 ஆம் திகதி விடுதலைப்புலிகள்மேற்கொண்ட சினைப்பர்த் தாக்குதலினால் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து நேற்று முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து சிங்கள இராணு (4 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் சிக்கி இளைஞர் மரணம்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தினரால் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் அகப்பட்ட இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியா கூழாங்குளத்தைச் சேர்ந்த சூசைப்பிள்ளை என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வருகிறது என்ற உணவுக் கப்பல் நேற்றுத்தான் வந்தது

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து உணவுப்பொருட்களை ஏற்றிவந்த சிகிரியா என்ற உணவுக்கப்பல் நேற்றுப்பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பல் இரு தினங்களுக்கு முன்னர் வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முல்லைத்தீவில் உணவுப்பொருட்களை இறக்குவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## வட - கிழக்கில் 10 நாளில் பட்டினி; ஆனாலும் அரசுக்கு ஆர்வமில்லை!

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து வடக்கு, கிழக்குப் பகுதியில் தீவிர உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தற்பொழுது தமிழர் பிரதேசத்தில் தங்கியிருந்து இயங்கிவரும் சர்வதேச நிவாரண நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் உணவுப் பற்றாக்குறை விடயத்தில் அபாய நிலையை அடைந்துள்ள போதும் இப்பணிகளுக்கு உணவுப்பொருட்களை கொண்டு செல்வதற்கான கப்பல், படகு வசதிகளை செய்து கொடுப்பதில் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ஷெல் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டப்பகுதியை நோக்கி ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் பல வீடுகளும், கடைகளும் பலத்த சேதமடைந்துள்ளன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்னா வவுனியாவுக்கு வந்து சென்றதன் பின்பே ஷெல் தாக்குதல் கூடுதலாக இடம் பெற்றுவருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

## இந்திய ஆளும் கட்சியினுள் மீண்டும் நெருக்கடி நிலை

(டில்லி)

இந்திய ஆளும் தேசிய முன்னணி அரசுக்கு மீண்டும் இரண்டாவது முறையாகபுதிய நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது.

மத்திய அமைச்சரான திரு. அருண்நேரு போபர்ஸ் விவகாரத்தில் ஈடுபட்டுள்ளார் என்று பிரதமர் வி. பி. சிங்கினால் எழுதப்பட்டதாக கூறப்படும் கடிதம் ஒன்றின் மூலமே இந்த புதிய நெருக்கடி (4 ஆம் பக்கம் பார்க்க)

## இல. தமிழருக்கு அனைத்து உதவிகளையும் செய்வோம்

- ஐ. கே. குஜ்ரால்

(டில்லி)

''பலவாறான துன்பங்களுக்குள்ளாகியிருக்கும் இலங்கைத் தமிழ்மக்களுக்கு இந்தியா தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் வழங்கும்'' என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற ஆலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே திரு. ஐ. கே. குஜ்ரால் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியாவின் (4 ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு மாவட்ட

## ஆசிரியர்களுக்கு 2 மாத சம்பளம் கிடைக்கவில்லை

முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களுக்கு ஜூன், ஜூலை மாதச் சம்பளப் பணம் இன்னமும் கிடைக்கவில்லையாம். இந்த மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. எல். மனோகரன் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். அவர் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னரே மட்டுநகர் சென்று அங்கிருந்து திரும்ப முடியாமல் உள்ளார்.

தற்போது முல்லை மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் தற்போதைய நெருக்கடியில் இரண்டு மாதச் சம்பளமும் இன்றி அவதிப்படுகிறார்கள். (75)

கப்பலில் வரும் உணவை

## பல. நோ. கூட். சங்கங்கள் களஞ்சியப்படுத்த நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக்குக் கப்பல் மூலம் கொண்டுவரப்படும் உணவுப் பொருட்களை வடமராட்சியிலுள்ள ஐந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஒன்றிணைந்து களஞ்சியப்படுத்தி ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த உணவுப் பொருட்களைத் துரித கதியில் இறக்குவதற்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் அனுசரணையுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பொருட்கள இறக்குவதற்கான வள்ளங்களை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள்ஒழுங்கு செய்து வழங்கியுள்ளன.

இந்த உணவுப்பொருட்கள் பருத்தித்துறைத் துறைமுகத்தில் இறக்குவதற்கேற்ற முறையில் பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் பருத்தித்துறை இறங்கு துறைப் பாலத்தைத் திருத்திப் புனரமைப்புச் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (25)

## மாணவர் மன்றங்கள் அடுத்த வருடம் முதல் இயங்கும்

(கொழும்பு)

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் மாணவர் மன்றங்களை அமைக்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாடசாலைகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளைமேற்கொள்ள அடுத்த வருடம் முதல் இது நடைமுறைப்படுத்தப்படும் என கல்வியமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பதில் சகல மாணவருக்கும் சம வாய்ப்புக்கள் அளிக்கப்படும் புதிய கல்வித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் சொன்னார்.

## 42ஆம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம் 1966 - 06 - 27

வீரமரணம் 1990 - 06 - 19

### செல்லையா உருத்திரதாஸ்
(வக்கீல்)

கோட்டையிலே உன்
உயிரை அந்நியன் கரங்கள்
பதம்பார்த்தன-
உன் மனக்கோயினிலே
என்ன இலட்சியத்திற்காக
உயிர் துறந்தாயோ
அவ்வழி நாம்
திரண்டெழுவோம்.

இல. 6/1 மீனாட்சி அம்மன்வீதி
கோட்டை 81

சகோதரர், உறவினர்
நண்பர்கள் மச்சான்மார்கள்,
மருமக்கள்

(B/1297)

## ''களத்தில் காத்தான்'' அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

''களத்தில் காத்தான்'' என்ற காத்தவராயன் கூத்துப் பாணியிலமைந்த நாட்டுக் கூத்து நேற்று முன்தினமிரவு மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் மைதானத்தில் அரங்கேற்றப்பட்டது. புத்தூர் செல்வம் தயாரித்த இக்கூத்தின் அரங்கேற்றத்துக்கு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் முக்கிய தலைவர்கள் சமுகமளித்துக் கண்டுகளித்தனர். விடுதலைப் புலிகளின் கலாசாரப் பிரிவினால் உருவாக்கப்பெற்ற ''களத்தில் காத்தான்'' நாட்டுக் கூத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவினரே நடித்துள்ளனர். இக் கூத்து தமிழீழமெங்கும்மேடை ஏற்றப்பட இருப்பதாகவும் தங்கள் பகுதியில் இதை மேடையேற்ற விரும்புவோர் கோண்டாவிலிலுள்ள யாழ். மாவட்டத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கலாசாரப்பிரிவு கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவிக்கிறார்.

யாழ். இந்து

## ஜி.சி.ஈ. (சா|தர) பரீட்சையில் சாதனை

(யாழ்ப்பாணம்)

ஜி. சி. ஈ. (சாதாரணதர) பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்துள்ளனர். இதில் 97வீத மானோர் உயர்கல்விபெறத் தகுதிபெற்றுள்ளனர். 76பேர் 7 விசேட சித்தியும் 13 பேர் 6 விசேட சித்தியும்,1 3பேர் 5 விசேட சித்தியும் 20 பேர் 4விசேட சித்தியும் பெற்றுள்ளனர். (மா)

## விசர் நாய்கள் அதிகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல கிராமங்களில் ஷெல் தாக்குதல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து அங்குள்ள நாய்கள் கவனிப்பாரற்று விசர் நோய்க்கு உள்ளாகி அலைகின்றன. இதனால் நாய்களினால் கடிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்ற தடுப்பு மருந்து இல்லாததால் அநேகர் உயிர் இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வடபகுதியில் தற்போது கடும் வெயில் எறிப்பதும் நாய்கள் விசர் நோய்க்கு உள்ளாக ஒரு காரணமாம். எனவே கொழும்பிலிருந்து விசர் நாய்க்கடி நோய்க்கான தடுப்பு மருந்தை பெருமளவில் தருவிக்குமாறு இப் பகுதிகளிலுள்ள பல பொது ஸ்தாபனங்களும் மருத்துவ நிலையங்களும் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரி உள்ளன. (75)

## மங்கையற்கரசி நாடு திரும்புகிறாராம்

(கொழும்பு)

மறைந்த கூட்டணி எம்.பி. அ.அமிர்தலிங்கத்தின்மனைவி திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம்' விரைவில் நாடு திரும்புவார் என்றும் அரசியல் விவகாரங்களில் கலந்து கொள்வார் என்றும் கொழும்பிலிருந்து வரும் பத்திரிகைகள் கூறுகின்றன.

## இலவச பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

கவியோகி சுத்தானந்த பாரதியாரின் ''தமிழ்த் தென்றல்'' தீஞ்சுவைக் கவிதை பிரசுரம் மில்க்வைற் தாபனத்தில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

## மாணவர் மீது ஹெலி சூடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் பரீட்சை முடிவுகளை பார்ப்பதற்காக பாடசாலை சென்ற மாணவர்கள் மீது ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. தினசரி இங்கு ஹெலித்தாக்குதல் நடைபெறுகிறது.

நேற்று முன் தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணவர்கள் தமது பரீட்சை முடிவுகளை ஆவலுடன் பார்க்கச் சென்ற சமயம் திடீரென வந்த ஹெலிக்கொப்ரர் ஒன்று மாணவர் கூட்டத்தை நோக்கி சரமாரியாக துப்பாக்கிவேட்டுக்களை தீர்த்தது (லோ)

## வரிவிளம்பரம்

திருக்கோணமலை சாம்பல் தீவைச் சேர்ந்த நாகராஜா ஜெயந்தினி என்பவரின் அடையாள அட்டை 30.7.90 அன்று கோப்பாய் நல்லூர் பகுதிக்கிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தோர் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (R. 554)

## புதுக்குடியிருப்பில் சீனியின் விலை கிலோ 45 ரூபா

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பகுதியில் சீனியின் விலை கிலோ 45 ரூபாவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிற்றூரவை, வட்ட அவை எடுத்த நடவடிக்கையால் இவ்வாறு குறைக்கப்பட்டது.

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 29-04-1971

துரோகியின் கையில் 12-08-1989

### சுந்தரம் பிரபாகரன் (றமேஸ்)

தம்பி நீ எம்மோடு நெடுந்தூரம் வருவாயென்று
நம்பியிருந்தோமே!
நடுவழியில் ஏன் பிரிந்தாய்?
வேரோடு மரம்புரண்டு வீதியிலே வீழ்ந்ததுபோல்
எம்மோடு ஊராரும் உமை நினைந்து
வாடுகின்றார்.

E. P. R. L. F. சமூகத் துரோகிகளால்
இவர் சுடப்பட்டார்.

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

உம் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா
தம்பிமார், தங்கைமார்,
மற்றும் நண்பர்கள்

(B.1299)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



வீர ஜனனம் 17-03-1970

வீர மரணம் 01-07-1990

### வீரவேங்கை பாண்டியன்
(A. T. எட்வின்)

வீரம் உன் காலடியில்
விழுந்தே கிடக்கிறது
காலன் உன் காலடியில்
கலங்கிப் போய்க் கிடக்கிறான்
வாழ்வைத் தூசாக்கி
மரணத்துக்கு மகத்துவம்
கொடுத்தவனே- இந்த மண்
உன்
தியாகத்தால் சிலிர்க்கிறது
உதிரத்தால் உயிர்க்கிறது.

பெரியகடை,
மன்னார்.

தகவல்: குடும்பத்தினர்
நண்பர்கள்

(R. 555)

சிந்தனைக்கு

''கெடுகுடி சொற்கேளாது''

— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 31-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# சொல்லும் செயலும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கைகளால் தீர்வுகாண முடியாது என்று மாலைதீவின் சுதந்திர தின வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு திரும்பும்போது சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்கா தெரிவித்திருந்தார்.

இதற்குமுன் சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்கா பிரேமதாசாவும் இதே கருத்தையே தெரிவித்திருந்தார். அவரது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் இப்படி இடையிடையே சொல்லியிருக்கிறார்.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரிசில்வாவும் இதே கருத்தை சிறிது விளக்கமாகவும் கொஞ்சம் உறைப்பாகவும் கூறியிருக்கிறார்.

பிரதமர் விஜயதுங்காவும் சரி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும் சரி பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்று சொல்லும்போதெல்லாம் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை முதலில் கீழே போடவேண்டும் அல்லது அவற்றை ஒப்படைக்க வேண்டுமென்ற ''நிபந்தனை''யை பழைய பல்லவியாகப் பாடத் தவறுவதில்லை.

தமிழ் இளைஞர்கள் எதற்காக ஆயுதம் ஏந்தினார்கள். ஆயுதம் ஏந்துவதற்கு முன்னர் தமிழ்மக்களின் நிலை எப்படி இருந்தது? என்பதைப்பற்றி நாமும் இதே பந்தியில் பல தடவைகள் மிகக் குறுகிய காலத்துள் எடுத்துக் காட்டியிருந்தோம் மற்றும் பலரும் இதற்கு முன்னரே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இவையெல்லாம் அவர்கள் காதுகளில் விழுந்ததாகவோ விழுவதாகவோ தெரியவில்லை. சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பதுபோல் ஒரே இராகத்தையே பாடிவருகின்றனர்.

இவர்கள் வெளிப்படையாகச் சொல்லத் தயங்குவதை உலகின் முதற் பெண் பிரதமர் என்று பெயர்பெற்ற, சிறிலங்கா பாராளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மட்டும் ''வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் ஒரேவழி'' என்று தென்னிலங்கை சிங்கள பௌத்த பேரினவாதிகளின் உண்மையான உள்ளக் கிடக்கையைத் துணிந்து கூறியிருந்தார்.

ஆனாலும் அவரது கணவர் போல சிறிமா அம்மையாரும் பின்னர் மனதை மாற்றிக்கொண்டதாகக் காட்டி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார். விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது என்று தாம் சொல்லவில்லை என்றும் அம்மையார் கூறியிருக்கிறார்.

மகன் அநுரா டில்லி சென்று திரும்பிய பின் ஏற்பட்ட ஞானோதயமோ தெரியவில்லை!

எது எப்படியிருந்தாலும் சிறிலங்கா ஜனாதிபதி முதல் எதிர்க்கட்சித்தலைவர் சிறிமா அம்மையார்வரை அரசியல்வாதிகளும் இராணுவ அதிகாரிகளும் பேச்சுவார்த்தை மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணப்படவேண்டும் என்று வாயால்சொல்லி வந்தாலும் செயல்யாவும் இதற்கு முற்றிலும் எதிர்மாறாகவே இருக்கிறது.

அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்று கூறுவோர் ஆயுதங்கள்மூலம் அரசியல்தீர்வுகாண விழைகிறார்கள்.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சர்வதேச சமூகம்பார்வையாளர்களாக இருக்கவேண்டும் என்று யோசனை தெரிவித்த சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா சர்வதேசநடுவர்களைத் தேடுவதற்குப்பதிலாக சர்தேசத்திலும் ஆயுத உதவி கேட்கிறார்.

ஆயுத உதவி வழங்க ஆஸ்திரேலியா மறுத்துவிட்டது. சீனாவும் சமாளித்து நழுவி விட்டது. ஈரான்மட்டும் ஆயுதங்கள் வழங்க முன்வந்துள்ளது.

வருடக்கணக்காக ஈராக்குடன் போர்புரிந்த ஈரான் கிடப்பில் போடவேண்டிய துருப்பிடித்துப் போகும் ஆயுதங்களையும் சாதனங்களையும் வழங்கத் தயாராக இருப்பதில் ஆச்சரியமில்லை!

எங்கிருந்து, என்னதான் ஆயுதங்களை வாங்கினாலும் மனோவலிமையையும் மக்கள் சக்தியையும் எங்கிருந்தும் விலைகொடுத்து வாங்கிவிடமுடியாது என்பதை சிறிலங்கா பேரினவாதிகள் எப்போது உணரப்போகிறார்களோ?

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக் கேட்டேன்

# இராணுவம் வடமராட்சியை கைப்பற்றத் தீர்மானித்தது

-ஜே. ஆர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனா லங்கா கார்டியன் ஆசிரியர் மேர்வின் டி சில்வாவிற்கு அளித்த பேட்டியின் முக்கிய பகுதிகளைஇங்கே தமிழில் தருகின்றோம். இப் பேட்டி லங்கா கார்டியனின் ஜூலை1ஆம் திகதி இதழில் வெளிவந்தது.

கே: ஈழம் யுத்தம் ii இப்போது நடைபெறுவதால் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் இராணுவ நடவடிக்கை மீண்டும் மக்கள் கவனத்தை ஈர்க்கின்றது. 1987 முற்பகுதியில் நீங்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு ஆணை பிறப்பித்தீர்கள் அல்லவா?

ஜே.ஆர்: யாழ்ப்பாணத்தில் உள்ள சிவிலியன்களை அப்புறப்படுத்திவிட்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு நான் படைத்தளபதிகளைக் கேட்டேன். ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்குப் பதிலாக வடமராட்சியைக் கைப்பற்ற இராணுவம் தீர்மானித்தது. அதனைச் செய்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு இரண்டாவது தடவையாக அவர்களை நான் கேட்டேன்.

கே: அது எப்பொழுது?

ஜே.ஆர்: 1987 மே ஜூனில் வடமராட்சிக்குப் பின்னர் நான் முதலாவது தடவையாக கேட்டது பெப்ரவரி 1987இல்

கே: அந்தத்திகதியை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?

ஜே.ஆர்: அந்தக்கட்டத்தில் எமக்கு எதிரான ஆர்ப்பாட்டம் எதிர்ப்பு குறைவாக இருக்கும் என நான் நினைத்தேன் (அக்கட்டத்தில் டெல்கியில் லோக் சபா உறுப்பினர்கள் கூடவில்லை)

முழு யாழ்ப்பாண போர் நடவடிக்கையையும் ஒரு சிறிய காலத்தில் முடித்து விட வேண்டும் என நான் விரும்பினேன் ஆனால் படைத் தளபதிகள் வடமராட்சியைக் கைப்பற்ற வேண்டும் எனபலமாக வாதிட்டனர். வடமராட்சி நடவடிக்கை முடிந்த பின்னர் தளபதி ரணதுங்க தான் எதிர் கொள்ள வேண்டியிருந்த பிரச்சினைகள் குறித்து எனக்கும் பாதுகாப்பு சபைக்கும் பின்னர் அமைச்சரவைக்கும் அறிவித்தார். உயிரிழப்புகளின் வீதம் மிகக் கூடுதலாக இருந்தது மேலும் நான்குபட்டாலியன்கள்வேண்டும் என்றார். படைகளுக்கு வேண்டியவற்றை வழங்குவதில் பெரும் பிரச்சினை இருந்தது. அப்பொழுது விமானப் படை வான்பாதுகாப்பு அளிக்கத் தயங்கியது. ஒருவிமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட பின்னர்

கே: அந்த ஆலோசனையை நீங்கள் ஏற்க வேண்டியிருந்ததா...? முழுஅதிகாரம் வாய்ந்த தளபதி என்ற முறையில் நீங்கள்...

ஜே ஆர்: ஆம்; முழு அதிகாரம் வாய்ந்த தளபதிஎன்ற முறையில் அமைச்சரவையைக் கூடகலந்தாலோசிக்காது முழு இராணுவ தீர்மானங்களையும் நான் எடுத்திருக்க முடியும்... இந்திய அமைதிப்படையைப் பொறுத்தவரை... அந்த தீர்மானங்களை நானே எடுத்தேன். ஆனால் இங்கே முழு ஒத்துழைப்பும் எனக்குத் தேவைப்பட்டது. இளம் அதிகாரிகளை தலைமைப்பதவிகளுக்கு நியமிக்கலாம் என சிலர் ஆலோசிக்கலாம்ஆனால் அத்தகைய ஒரு பாரதூரமான நடவடிக்கையை எடுப்பதில்லை என நான் முடிவு செய்தேன் இதற்கிடையில் யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதற்கு இந்திய அரசாங்கம் எம்மை அனுமதிக்காது என எனக்கு அறிவிக்கப்பட்டது. அமைச்சரவைக்கும் இது அறிவிக்கப்பட்டது.

கே: இது தொடர்பாக டிக்சிற்றினதும் அத்துலத்முதலியினதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அது ஒரு அச்சுறுத்தலாக அல்லது ஒரு எச்சரிக்கையாக இருந்ததா? நீங்கள் இதனை எவ்வாறு புரிந்து கொண்டீர்கள்.

ஜே. ஆர்: அது அச்சுறுத்தலாகவோ எச்சரிக்கையாகவோ அமையவில்லை. ராணுவரீதியாக இந்தியா பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கி உதவும் என நினைத்தேன். பிரபலமான சர்வதேச சஞ்சிகை ஒன்றும் இத்தகைய சூழ்நிலையில் இந்தியா தலையிடும் என செய்தி வெளியிட்டிருந்தது... அப்படியென்றால் நாம் அவர்களைத் தோற்கடித்திருக்க முடியாது.

கே: எந்த சஞ்சிகையில்?

ஜே. ஆர்: அது லலித்திற்கு தெரியும்.

(தொடரும்)

**1987 ஆம் ஆண்டு மே, யூன் மாதங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவிய இராணுவச் சூழலை ஒத்த ஒரு சூழல் இன்று நிலவுவதால் இப் பேட்டி பொருத்தப்பாடு உடையதாக இருக்கும்.**

# தென்னாபிரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சிக் கூட்டம்

(கேப்டவுண்)

தென்னாபிரிக்காவில் கம்யூனிஸ்ட்கட்சி 40 வருட காலத்தின் பின்னர் முதலாவது கூட்டம் ஒன்றை நடாத்த முன்வந்துள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையை சாதகமாக்கிஅடுத்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறவும் ஆட்சி அமைக்கும் எண்ணத்துடன் இக்கட்சி ஈடுபட்டுவருகிறது.

இனப்பாகுபாட்டுக் கொள்கையுடன் தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிக்கு வரும் விதமாக சில கொள்கைகளை மக்கள் முன்வைக்க கட்சி முன்வந்துள்ளது.

சிறுபான்மை இனத்தவருடன் அரசு நடாத்தும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு இதுஇடையூறாக அமையலாம் என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## 42 பேருக்கு மரணதண்டனை

(லண்டன்)

நைஜீரியாவில் புரட்சிச் சதி முயற்சியில் ஈடுபட்ட நாற்பத்திரண்டு பேருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது.

இவர்களுக்கு இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டு மரணதண்டனை நிறைவேற்றினர்.

## சுட்டுக் கொலை

(புதுடில்லி)

அஸாம் மாநிலத்தில் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவரும் அவரது கார்ச்சாரதியும் பாதுகாவலரும் லாகோவால் என்ற இடத்தில் இனம்தெரியாத சிலரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தப் பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டதன்எதிரொலியாக மாநிலஉள்துறை அமைச்சர் பதவி விலகியுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

## அமெரிக்கா ஆதரவு

(ஜகார்த்தா)

கம்போடிய மக்கள் சுயநிர்ணய உரிமை பெறுவதற்கு நீதியான தேர்தல் நடைபெறுவதை அமெரிக்கா ஆதரிப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் கூறினார்.

## கைதிகளை விடுவிக்க தீவிரவாதிகள் நிபந்தனை

(போட் ஒப் ஸ்பெயின்)

ட்ரினிடாட் ருபாகோவில் பணயம் வைக்கப்பட்டுள்ள பிரதமர், அமைச்சர்களை விடுவிக்க தீவிரவாதிகள் சில நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

பிரதமர் பதவி விலகி தொண்ணூறு நாட்களுக்குள் தேர்தல் நடைபெறவேண்டும் எனவும் அவர்கள் நிபந்தனை விதித்தனர்.

## நீர், உணவு இன்றி 5000 பேர் அவதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறையில் உள்ள வீரமுனை கிராம மக்கள் உணவும் குடிநீரும் இன்றி அவதிப்படுவதாக அங்கிருந்து கொழும்புக்கு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

# திருமலையில் 18 குடும்பஸ்தர்கள் முகமூடியின் உதவியுடன் கைது!

(திருகோணமலை)

திருகோணமலையில் கடந்த 28 ஆம் திகதி இரண்டு இடங்களில் பதினெட்டுப் பொது மக்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர். இங்கு முகமூடிகள் உதவியுடனும் பொது மக்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

கடந்த 28 ஆம் திகதி ஆலங்கேணியில் உள்ள அகதி முகாமிற்கு சிங்கள இராணுவத்தினர் முகமூடிகள் சிலரை அழைத்து வந்தனர். இம் முகமூடிகள் ஒன்பது பொது மக்களை அடையாளம் காட்டியதனால் இராணுவத்தினர் அவர்களைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இவர்கள் அனைவரும் குடும்பஸ்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனித்தம்பி-பாக்கியராஜா, சண்முகம், வடிவேல், இளையதம்பி-வன்னியசிங்கம், நடேசன்-நாதன், குணம்–நெல்லிநாதன், நாகராஜா - நாதன், காளி - வெள்ளையான், அருணாசலம் ஆகியோரே சிங்கள இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

மேலும் கந்தளாய் கோயில் கிராமத்தில் உள்ள ஒன்பது ஆண்களைசிங்களஇராணுவத்தினர் கைதுசெய்து கந்தளாய் இராணுவமுகாமிற்குகொண்டு சென்றுள்ளனர். (ம)

## தமிழகத்திற்கு இதுவரை 45,000 இல. தமிழ் அகதிகள்

(சென்னை)

அண்மைக் காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் இன அழிப்பு நடவடிக்கைகளின் நிமித்தம் இதுவரை 45 ஆயிரம் தமிழ் அகதிகள் தமிழகம் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் ஐம்பது படகுகளில் இரண்டாயிரம் தமிழ் அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள். இவர்கள் தமிழகத்தில் உள்ள பல்வேறு முகாம்களில் குடியமர்த்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பொருட்கள் அதிக விலையில் வாங்கவும் விற்கவும் தடை

வவுனியா மாவட்டத்தில் அத்தியாவசிய பொருட்களை அதிக விலையில் கொள்முதல் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் பலத்த கட்டுப்பாடு புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதிக் கடைகளில் அத்தியாவசிய பொருட்களை நியாயமான விலையில் பெறக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது,

இப்பகுதிக்கடைச் சொந்தக்காரர்களுக்கு பொருட்களுக்கான புதிய கட்டுப்பாட்டு விலை பற்றிய விலைப்பட்டியலை பலகைகளில் போடுமாறும் பணிக்கப் பட்டுள்ளதாம்.

விடுதலைப்புலிகளின் இந்த நியாய விலை நடவடிக்கையால் பலத்த ஆதரவும் பாராட்டும் மக்களிடமிருந்து கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## லெப். சிறிக்கு வீர அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் கோட்டைப் பகுதியில் நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சில் வீர மரணமடைந்த லெப்டினன்ட் சிறியின் (ஹரி பத்மநாதன்) உடல் யாழ். வீதியில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போது மக்கள் சென்று அஞ்சலி செலுத்தினர். பின்னர் அவரது உடல் மாலை நல்லடக்கம் செய்யப்பட்டது.

### இந்திய ஆளும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை ஏற்பட்டுள்ளது.

திரு. சிங்கினால் அருண் நேருவுக்கு எழுதப்பட்டதாகக் கூறப்படும் இக்கடிதம் போலி என்றும்; இதனை துணைப் பி தமரான திரு. தேவிலாலே பிரதமர் சிங்கின் போலிக் கையொப்பத்துடன் அனுப்பி வைத்ததாகவும் முதலில் ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தெரிகின்றது.

இதனைத் தொடர்ந்து துணைப் பிரதமர் திரு. தேவிலாலைப் பதவியிலிருந்து விலக்க வேண்டுமென தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பல கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இதேவேளை துணைப் பிரதமர் தேவிலாலைப் பதவியில் தொடர்ந்து வைத்திருத்தல், அல்லது நீக்குதல் ஆகிய இரு நடவடிக்கைகளாலும் இந்திய அரசியலில் பல நெருக்கடிகள் உருவாகலாம் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலைமையைத் தொடர்ந்து பிரதமர் திரு. வி. பி. சிங் பாரதீய கட்சி, மாக்ஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் நேற்றிரவு பேச்சுக்களை நடத்தினார்.

### மட்டக்களப்பில் . . .

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

ஓவியர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாவர். மட்டக்களப்பிலுள்ள ஒரு ஆலயத்தில் சிற்பவேலை செய்வதற்காக வந்திருந்தார்கள்.

இந்திய தூதரகத்தினால் இந்தஓவியர்களின் பிரச்சினை அரசின்கவனத்திற்குகொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து இது குறித்துதக்கநடவடிக்கை எடுக்கப்படுமென இலங்கை அரசுதரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### வவுனியாவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரட்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

கிழக்கு மாகாணத்தில் ஒன்பது கிராமங்களை சிங்கள மயமாக்கியுள்ள சிறிலங்கா அரசு வவுனியா மாவட்டத்தையும் முழுச்சிங்கள மயமாக்கும் ஒரு நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை சிறிலங்கா அரசு கடந்த வாரத்தில் வவுனியா நகரை ''கஜபாகு நகரம்'' என்று பெயர்மாற்றம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### கிணற்றில்!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாறு சென்றவரே இராணுவத்தினரால் கொல்லப்பட்டு கிணற்றுக்குள் போடப்பட்டுள்ளார்.

மேலும் இம்முகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

### இந்த இளைஞரின் ...

( 1 ஆம் பக்கத் தொடர்ச்சி )

ஷெல்ஒன்றை எடுத்து அதனை கத்தியால் கொத்தி ஆராய்ச்சி செய்ய முற்பட்டபோது அந்த ஷெல் வெடித்ததில் இவர் படுகாயமுற்றார். இதனால் மானிப்பாய் வைத்தியசாலையில் உடன் காரைநகர் அம்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டார். (லோ)

### வருகிறது-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக இருதினங்கள் தாமதித்தே வந்தது.

இக்கப்பலில் வந்த உணவுப் பொருள்கள் ஸ்ரீலங்கா அரசினால் யாழ்.அரசாங்க அதிபருக்கே அனுப்பி வைக்கப்பட்டது.

இக்கப்பலில் இருந்து உணவுப்பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று மதியத்தில் இருந்து தொடர்ந்து நடைபெற்றவண்ணம் உள்ளது. மேலும் இவ்வுணவுப்பொருட்களை துறைமுகத்தில் இருந்து பாதுகாப்பாக கொண்டுவருவதற்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். கிளையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் சேர்ந்து பாதுகாப்பு வழங்குவர். இந்த உணவுப் பொருள்களை ஏற்றி வருவதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகளுடன் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் லொறிகளும் இரண்டு சென்றுள்ளன.

இக்கப்பல் திரும்பிச் செல்லும்போது கொழும்பிற்கு அனுப்புவதற்காகச் சேகரித்து வைத்துள்ள தபால் பொதிகளைஎடுத்துச் செல்லவுள்ளது

### முல்லைத்தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வத்தினர் வெளியேறி ஆஸ்பத்திரி வீதியால் முன்னேற முற்பட்டபோது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலைமேற்கொண்டனர்.

விடுதலைப்புலிகளின் எதிர்த்தாக்குதலைச் சமாளிக்க முடியாத ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீண்டும் தமது முகாமிற்குப் பின்வாங்கிவிட்டனர்.

அன்றுஇம்முகாமிற்குஹெலி இறக்குவதற்குப்பெரும் முயற்சி நடந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்த் தாக்குதல் காரணமாக ஹெலி இறங்காமல் திரும்பிவிட்டது. (ம)

### வட-கிழக்கில்-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா அரசு மந்த நிலையிலான ஒரு போக்கையே கடைப்பிடித்து வருவதாகவும் இந்த சர்வதேச நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா அரசின் இந்த மந்த நிலைமை தொடருமானால் இன்னும் பத்து நாட்களுக்குள் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பெரும் பசி, பட்டினி நிலைமை ஏற்படும் நிலைமையும் ஏற்படலாம் என்று அந்த நிறுவனங்கள் கூறியுள்ளன.

வடக்கு, கிழக்கு நிலைமைகளைக் கவனத்திற்கொண்டு பிரிட்டன் உட்பட பல உலக நாடுகள் நிவாரணங்களை வழங்க முன்வந்துள்ளபோதும் ஸ்ரீலங்கா அரசு அவற்றை இப்பகுதிகளுக்கு அனுப்பிவைப்பதில் எவ்வித அக்கறையும் மேற்கொள்வதாகத் தெரியவில்லை என்று கூறியுள்ளமேற்படிநிறுவனங்கள் தற்பொழுது வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கான தரைமார்க்கப்பாதைகள் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளன.

விமானம் மூலம் வடக்குக் கிழக்குப் பகுதி மக்களுக்கு உணவுப்பொருட்களைப் போட உள்ளதாக அரசாங்கம்கூறியுள்ளது. தற்பொழுது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களுக்கு உணவுப் பொருட்களைப் போடுவதில் ஸ்ரீலங்காவின் விமானங்கள் ஈடுபட்டுள்ளதால், அவைகளால் இப்பிரதேச மக்களுக்கு விமானம் மூலம்உணவுப்பொருட்களைப் போடுவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றதென்றும் உலக நிறுவனங்கள் பி. பி. சி. க்குத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மிதிவெடியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இளைஞர் மிதிவெடியில் அகப்பட்டதைத் தொடர்ந்து வவுனியாவில் வைத்திய வசதிகள் இல்லாமையின் நிமித்தம் நெடுங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டதாகவும், வைத்தியசிகிச்சைக்கான கால தாமதத்தின் நிமித்தம் ஏற்பட்ட அதிக இரத்த வெளியேற்றத்தின் நிமித்தமே இந்த இளை மரணமடைந்துள்ளார்.

இவருடன் வேறு இரு பலத்த காயமடைந்துள் குறிப்பிடத்தக்கது.

### இல. தமிழருக்கு

கவலையைத் தெரிவித்த அவ இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்படும் வடக்குக் கிழக் குத் தமிழ் மக்களுக்கு அங் கேயே அகதி முகாம் அமைத் துப் பாதுகாப்பு வழங்க இலங் கையரசும், அகதிகளுக்கு பொறுப்பான சர்வதேச அமை ப்புக்களும் இந்தியாவுக்கு உறு தியளித்துள்ளதாகவும் தெ வித்த அமைச்சர்இந்தியா ஒ போதும் இலங்கையில் இரா ணுவத் தலையீட்டை மே கொள்ளாதெனவும் தெரிவி துள்ளார்.

### கிளிநொச்சியில்

(1 ஆம் யக்கத் தொடர்ச்சி)

தனில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை விடுதலைப்புலிகள் சூழ்ந்துள்ளதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கோட்டையில் . . .

கொண்டுஅலைமோதினர். தங்கள் பாதுகாப்புகளை மக்கள் தேடிக்கொண்டிருந்ததால் உயிர்ச்சேதம் ஏற்படாம தவிர்த்துக் கொண்டனர். ஆனால் வீடுகள், கட்டிடங்க பலதரைமட்டமாயின. கடந்த சிலவாரங்களாக யாழ். கோட்டைப்பகுதியிலேயே குண்டு தாக்கிவந்த விமானப்படை நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப்பகுதியிலும் குண்டு வீசித்தாக்கின.

நேற்றுக்காலை சுமார்எட்டு மணிக்கு யாழ். நகர்மீது வட்டமிடத்தொடங்கிய ஸ்ரீலங்கா போர் விமானங்களும் அவ்ரோ விமானங்களும் குண்டுவீச்சுத் தாக்குதலில் ஈடுபட்டதுடன் தொடர்ந்து பல தடவைக இரவுவரை வானில் பறந் வண்ணமும் இடையிடையே குண்டு வீச்சு நடாத்தியும் நகரைக்கலக்கிக்கொண்டிருந்தன

ஸ்ரீலங்கா போர் விமானங்கள் நடாத்தி தாக்குதல்கள் நடந்த இடங்களில் மக்கள் ஏற்கனவே வெளியேறி இரு ததாலும் பதுங்கு குழிகளி மக்கள் பாதுகாப்புத் தேடி கொண்டிருந்ததாலும் உயிர் சேதங்கள் தவிர்க்கப்பட்டன

நேற்றைய குண்டுவீச்சி யாழ்ப்பாணக் கோட்டையை அண்டிய பகுதிகளில் மட்டும லாது யாழ். பல்கலைக்கழ தின் சுற்றாடலில் உள்ள கள், கைத்தொழில் நிலைய கள், வாழைத்தோட்டங்க என்பனவும் பலத்த சேதமு றன. மேலும் கந்தர்மட பழம்றோட்டிலும் நான்கு வீ கள் கடுமையான சேதத்தி குள்ளாகின.

மாலை மூன்று மணிய லும் இரவு 7.20 மணிய லும் ஹெலிக்கொப்டர் நகரின் பல பாகங்கள் பலதடவைகள் வட்ட நோட்டம் விட்டுச்செ குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### திரு. சே. சண்முகநாதன்
(வேலும் மயிலும்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் 226இல் வசிக்கும் திரு. சேனாதிராசா சண்முகநாதன் (வேலும்மயிலும்) 30 07.90 இல் காலமாகி விட்டார். அன்னார் யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதி சேனாதிராசா அன் சன்ஸ் உரிமையாளரும், மோட்டார் சைக்கிள் விற்பனையாளரும், உதிரிப்பாக விற்பனையாளர் துரைசாமி சேனாதிராசாவினதும், சரஸ்வதியினதும் அன்பு மகனும், இ. சபேசன் (சட்டத்தரணி) அவர்களின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01 . 08 . 90 இல் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காலை 10 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
பெற்றோர்,
சகோதர, சகோதரிகள்

(R/556)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.